
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1256

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

69

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.



படங்கள் உதவி : ஞானம்

# அரசியல் அவலத்தைத் தோலுரித்த ‘மதுரை மீனாட்சி!’

**1993**-ஆம் ஆண்டு, ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில், மிக வெளிப்படையாகவும் நேரடியாகவும் ஆட்சியாளரின் நில அபகரிப்பு, அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றிற்கு எதிராகக் கலைஞர் மிகக் கடுமையான விமர்சனங்களை எழுதி வெளிவந்த திரைப்படம்தான், ‘மதுரை மீனாட்சி’யாகும்.

வழக்கம் போலவே, இந்தத் திரைப்படத்தின் தொடக்கத்திலும் கலைஞர் திரையில் தோன்றி, படத்தின் உள்ளடக்கம் மற்றும் நோக்கம் குறித்து எடுத்துச்சொல்கிறார்.

வணக்கம், என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே வணக்கம். மதுரை மீனாட்சி என்றதும் பக்திப் படமா? எனக் கேட்டனர் பலரும். ஆம், பக்திப் படம்தான்! பக்தி என்பது கடவுளிடம் மாத்திரம் காட்டப் படவேண்டிய ஒன்றல்ல. ‘பக்தி’ என்றாலே ‘பற்று’ எனவும் பொருள் கொள்ளலாம். எனவே, ‘நாட்டின்மீது கொள்ளும் பற்று’, ‘சமுதாயத்தின்மீது கொள்ளும் பற்று,’ ‘அரசியல் நாணயத்தின்மீது கொள்ளும் பற்று’ இவற்றை அடிப்படையாக வைத்து தீட்டப்பட்டுள்ள திரைச்சித்திரமே ‘மதுரை மீனாட்சி’.

அதிகாரத்திலிருப்பவர் எப்படி இருக்க வேண்டும் என்பதைவிட, எப்படி இருக்கக் கூடாது என்பதை விளக்குவதே இப்படத்தின் நோக்கம். விளையாட்டுக் குணம் படைத்த ஒரு வெகுளிப் பெண். அவள் மீது அன்பை அளவுக்கு மீறி பொழியும் அதிகார வெறியும், அந்தஸ்து மோகமும் கொண்ட ஒரு தந்தை, கடமையில் நாட்டமுடைய ஒரு காவல் துறை ஊழியன் அவனைத் தன் கண்ணின் மணியாகக் கருதும் தாய். இவர்களேயன்றி கயமை ஆணவத்தினால் பழிவாங்கப்படும் கருணைமிக்க ஒரு குடும்பம். இவர்களைச் சுற்றிச்சுழலும் இன்றைய நாட்டுநடப்புதான் இயக்குநர் அமிர்தத்தின் கலைவண்ணம் காட்டும் பூமாலை புரொடக்ஷன் வழங்கிய ‘மதுரை மீனாட்சி’ என்று கலைஞர் படத்தின் கதைக் கருவை எடுத்துச்சொல்கிறார்.

படத்தின் முதல் காட்சியே கூர்மையான அரசியல் விமர்சனத்துடன்தான் தொடங்கும். மனநிலை பாதிப்புக்குள்ளான மரகதம் (சுஜாதா), தன் மகன் மதுரையின் போக்கு வரத்துக் காவலர் உடுப்பை அணிந்து கொண்டுவந்து, சாலையின் நடுவில் நின்று மந்திரியின் காரை மறிக்கிறாள்.

காவலர்கள் ஓடிவந்து அவளை விரட்டுகின்றனர். அப்போது....

**காவல் அதிகாரி :** ஏய் பைத்தியம்! என்ன இது, வழியை விடு...

**மரகதம் :** ஏய் யாருக்கய்யா பைத்தியம்? உனக்கு அதிகார பைத்தியம்! உங்க மந்திரிக்குப் பதவிப் பைத்தியம்!

**காவல் அதிகாரி :** ஏய், என்ன சொன்ன?

**மரகதம் :** பின்ன என்னய்யா, எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இவரே மந்திரியா இருக்குறாரு! இது, பதவிப் பைத்தியம் இல்ல? சொல்லுய்யா!

**காவல் அதிகாரி :** இப்ப, மந்திரி கார் போறதுக்கு வழிவிடப்போறியா இல்லையா?

**மரகதம் :** மந்திரி கார் நிற்கட்டும், மக்கள் கார் போகட்டும்... என்கிறாள்.

இந்தக் காட்சியும் கலைஞரின் வசனமும் இன்றைக்கு நடைபெறும் சட்டமன்ற உறுப்பினர்களின் ராஜினாமா, அசிங்கமான கட்சித் தாவல், பதவி வெறி அரசியலுக்கும் அப்படியே பொருந்துகிறது.

அடுத்து ஒரு காட்சியில், உள்துறை அமைச்சர் உலகநாதனின் (கேப்டன் ராஜு) அலுவலக அறையில் டெலிபோன் மணி ஒலிக்கிறது. அமைச்சரும் அவரது உதவியாளர் பிரம்மையாவும் (எஸ்.எஸ்.சந்திரன்) பயந்து நடுங்கிப் பதறுகின்றனர். அமைச்சர் போன் எடுத்து, பயத்துடனே பேசுவார். எஸ்டேட்டை வாங்க வேண்டும் என விரும்பும் முதலமைச்சரிடம், பயபக்தியுடன் பேசிவிட்டு, படபடப்புடனே இருக்கையில் அமர்வார். “அந்த எஸ்டேட் விசயத்தை இன்னும் முடிக்கலையான்னு ஒரே திட்டு” என்பார்.

அந்த எஸ்டேட்டைப் பார்த்துவிட்டு வரும் அமைச்சர் உலகநாதன், “ஆஹா, ரொம்ப அருமையான இடம், ஏராளமான மரம், செடி, கொடி, பயிர் பச்சை நடுவுல ஒரு வீடு, இதைப் பார்க்கும்போது எனக்கே வாங்கணும் போல ஆசையா இருக்கு, ஆனா என்ன பண்றது? முதலமைச்சர் வாங்க வேண்டும் என்று ஹெலிகாப்டர்ல வந்து பார்த்துட்டுப் போய்ட்டாங்களே?” என அன்றைய அரசியலைப் படம்பிடித்திருப்பார்.



### மிரட்டி வாங்கப்படும் சொத்து

ஒரு காட்சியில், அமைச்சருக்கும் எஸ்டேட் உரிமையாளரான நாசருக்கும் நடக்கும் உரையாடலில்...

**அமைச்சர் :** தம்பி, இந்தத் தோட்டத்துல முதலமைச்சரோட கண்ணு விழுந்திருக்கு....

**குணசேகரன் :** கண்ணா?

அதுவும் முதலமைச்சரோட கண்ணா? எங்க விழுந்திருக்கு, தேடிப் பார்க்கலாம்.

**பிரம்மையா :** தம்பி, இந்தத் தோட்டத்துல முதலமைச்சர் கண்ணு விழலே, முதலமைச்சர் கண்ணுல இந்தத் தோட்டம் விழுந்திருக்கு.

**குணசேகரன் :** ஓகோ... அதனால?

**அமைச்சர் :** இத வாங்கணும்னு முடிவு செஞ்சு, என்ன விலையானாலும் வாங்கிடலாம்னு ஏம் மூலமா கேட்டுட்டு வரச்சொன்னதுனால...

**குணசேகரன் :** நீங்க சொன்னதக் கேட்டு நியாயமா எனக்குக் கோவந்தான் வரணும். ஆனா, வீட்டைத் தேடி வர்றவங்ககிட்ட பண்பா நடந்துக்கிறணும்னு எங்க அண்ணே அடிக்கடி சொல்வாரு. அதனால உங்க கிட்ட அமைதியா ஒண்ணு சொல்லணும்... வாங்க’ என்று அமைச்சரைத் தன் அண்ணனிடம் அழைத்துச்செல்வான்.

நாசரின் அண்ணனிடம் அமைச்சர் நடத்தும் உரையாடலின்போது, அவரது மனைவி கோமதி குறுக்கிட்டு கருத்து சொல்லும்போது, அமைச்சரின் உதவியாளர், “அம்மா, ஆம்பளைங்க பேசும்போது பொம்பளைங்க குறுக்க வந்து காரியத்தக் கெடுத்துறாதிங்கம்மா” என்பார். அதற்கு...

**கோமதி :** பொம்பளைங்களுக்கு எல்லாத் துலயும் சம உரிமை இருக்கு. சொத்துல கூட சம உரிமையிருக்குன்னு சட்டம் வந்திருக்கிறது உங்களுக்குத் தெரியாதாய்யா?”

**பிரம்மையா :** அதெல்லாம் போன சர்க்கார் செஞ்ச தப்பும்மா...

**அமைச்சர் :** எங்க முதலமைச்சர் நினைச்சா, அதை முடிச்சே தீரணும். எத்தனை இலட்சம் ஆனாலும் பரவாயில்லை.

**குணசேகரன் :** இலட்சங்களைப் பார்த்து இலட்சியங்களைக் காத்துல பறக்க விடுகிற ஆளுங்க வேற எங்கேயாச்சும் இருப்பாங்க போய்ப் பாருங்க.

**இன்ஸ்பெக்டர் ருத்ரா :** குணசேகரா... குடுக்கலைனா எடுத்துக்கிற அதிகாரம் எங்களுக்கு இருக்கு, மறந்துறாதே” என்று மிரட்டுவர்.

இவ்வாறு ‘மதுரை மீனாட்சி’ திரைப்படம் முழுவதும் ஜெயலலிதா ஆட்சிக்கால அவலங்களையும் அராஜகங்களையும் பற்றிய கலைஞரின் கூர்மையான வசனங்கள் நிறைந்திருக்கும். இதற்கிடையே போலீஸ்காரர் மதுரைக்கும் மந்திரி மகள் மீனாட்சிக்கும் (ரஞ்சிதா) இடையில் முதலில் மோதல், பிறகு காதல் இறுதியில் அமைச்சரின் சதியால் சாதல் என்று கதை முடிகிறது.

தன் மகனின் அகால மரணத்தைக் கண்டு மனம் பேதலித்துப்போன மரகதம், மனநலம் பாதிக்கப்பட்டு சாலையில் திரிவதுடன் படம் நிறைவடைகிறது. அதாவது, ‘அம்மா’வின் ஆட்சியில் அம்மாக்கள் பலர் மனநலம் பாதித்துத் திரிந்தனர் என்பதுதான் ‘மதுரை மீனாட்சி’ திரைப்படம் மூலம் கலைஞர் மக்களுக்குச் சொல்லும் செய்தியாகும்.

> **‘அம்மா’வின் ஆட்சியில் அம்மாக்கள் பலர் மனநலம் பாதித்துத் திரிந்தனர் என்பதுதான் ‘மதுரை மீனாட்சி’ திரைப்படம் மூலம் கலைஞர் மக்களுக்குச் சொல்லும் செய்தியாகும்.**

...காட்சி விரியும்

## கனவுகளற்ற இளைஞர்களால் பெரும் நாசம்!

இனம், மொழி, சாதி ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக இளம் தலைமுறையினர் போராடிய தமிழ்நாட்டில், பெரும் நாசத்தின் தூதுவர்களாக இன்றைய இளைஞர்கள் மாறிவருகிறார்கள் எனத் தனது ஆதங்கத்தை முகநூலில் வெளிப்படுத்தி இருக்கிறார், எழுத்தாளர் ம.மதிவண்ணன்.

“விஜய், எந்தத் தைரியத்தில் இப்படி மனதாரப் பொய் சொல்லி, அடாத பழி சுமத்தி, அடாவடியாகப் பேசுகிறார்?

அரசியலற்ற, சுயநலம் தன்மையம் கொண்ட தத்திப் பெருங்கூட்டம் இருக்கும் தைரியத்தில்தான். உங்களில் சிலர் சொல்வீர்கள், ‘நமது இளந்தலைமுறையைப் பற்றி இப்படி நெகட்டிவ் (negative) ஆகப் பேசாதீர்கள்’ என நமது நிலம், பல இளந்தலைமுறைகளைப் பார்த்திருக்கிறது!

நாட்டு விடுதலைக்காக, வெள்ளையரை எதிர்த்துப் போராடிய இளந்தலைமுறை.

சாதிக்கு எதிராகப் போராடி, பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்த இளந்தலைமுறை.

மொழிக்காகப் போராடி, நம் இனத்தின் எதிர்காலத்தைப் பாதுகாத்த இளந்தலைமுறை.

முதலாளித்துவச் சுரண்டலுக்கும் நிலப்பிரபுத்துவக் கொடுமைகளுக்கும் எதிராக வர்க்க உணர்வுகொண்டு போராடிய இளந்தலைமுறை.

ஆனால் விஜய் பின்னால் திரண்டிருப்பது, பார்ப்பனியத்துக்கு ஆதரவான, எல்லா வித மாற்றங்களுக்கும் எதிரான, எவ்வித மதிப்பீடுகளுமற்ற ஒரு கூட்டம்.

மன்னராட்சிக்கால கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்த ஒரு தலைமுறையின் நவீனகாலப் பிரதிநிதிகள் இவர்கள்!

சிந்தனையளவில் கிழட்டுப் பயல்கள்! இளமையின் ஆக்கபூர்வமான கனவுகள் எதுவும் அற்றவர்கள்.

ஒரு பெரும் நாசத்தின் தூதுவர்களான இவர்களைக் குறித்துப் பெருமைப்பட எதுவுமில்லை; துக்கப்பட நிறைய இருக்கின்றன” என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



கொள்ளுமேடு ராஜேந்திரன்



### தலைவர் போர்த்திய பொன்னாடை!

1985-இல் சென்னை அண்ணா நகர் பகுதி இலக்கிய அணி அமைப்பாளராக முத்தமிழறிஞர் கலைஞர் என்னை நியமனம் செய்தபோது, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், எனக்கு கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்தியபோது, எடுத்த படம். இப்போது, வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளராகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். தலைவர் எனக்கு அன்றைக்கு என்ன வழிகாட்டினாரோ, அதே வழியில் இன்றைக்கும் பயணித்துக்கொண்டிருக்கிறேன். அண்ணா நகர் பகுதியில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், என்னைப் போற்றிப் பாராட்டிய இந்தப் படத்தைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு மன நிறைவும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

**– கொள்ளுமேடு ராஜேந்திரன்,**
**அமைப்பாளர் தி.மு.க. இலக்கிய அணி**
**வில்லிவாக்கம் வடக்கு, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பலமுனைப் போட்டியைச் சந்தித்த கழகம்!

1957-ஆம் ஆண்டு, தி.மு.கழகம் முதன்முதலில் தேர்தலில் பங்கேற்றபோது, அனைத்துத் தொகுதிகளிலும் பலமுனைப் போட்டியே இருந்தது. சென்னை சட்டமன்றத்துக்கான 205 இடங்களுக்கு, 1,284 பேர் போட்டியிட்டனர். மக்களவைக்கு 206 பேர் போட்டியிட்டனர். தி.மு.கழகம் சட்டமன்றத்துக்கு 24 இடங்களில் சொந்த வேட்பாளர்களையும் ஏழு இடங்களில் ஆதரவாளர்களையும் நிறுத்தியது. மக்களவைக்கு 11 பேரையும் ஆதரவாளர்கள் ஐந்து பேரையும் போட்டியிடவைத்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900